தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.99/மா/2024, நாள் 21.08.2024**

திரு.P.முருகேசன், மணக்கரம்பை, தஞ்சாவூர் – முறையீட்டு மனுதாரர்

உதவி வருவாய் அலுவலர்
தஞ்சாவூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மணக்கரம்பையைச் சேர்ந்த திரு.P.முருகேசன் என்பவரின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.03.2024 அன்று பெறப்பட்டு 99/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர் மணக்கரம்பை வடக்கு வெள்ளாளர் தெரு 2/705 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.P.முருகேசன், என்பவர் தனது 04.03.2024 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட TS No.1884 மீது சட்டப்படி வருவாய்துறை ஆவணங்கள், பத்திர பதிவு துறை ஆவணங்கள் மற்றும் மாநகராட்சி ‘அ’ பதிவேடுகள் என அனைத்தும் திரு.P.முருகேசன் S/o R.பெரியசாமி (லேட்) பெயரில் இருந்து வருகின்ற நிலையில் அந்த சொத்து மற்றும் உடமைகளுக்கு சிறிதும் சம்பந்தம் இல்லாத திருமதி R.ஞானாமிர்தம் மீது வரி ஏற்படுத்த வசதியாக ரூபாய் 25,000/– ஐ உதவி வருவாய் அலுவலர் திரு.அசோகன் என்பவர் கையூட்டு பெற்றுக்கொண்டு செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் மாநகராட்சி கடிதத்தின்படி வருவாய்துறை ஆவணம், பதிவுத்துறை ஆவணம், மற்றும் மாநகராட்சி ‘அ’ பதிவேடு பதிவுறுகள் அனைத்தும் திரு.P.முருகேசன் பெயரில் இருந்து வந்துள்ளதாக குறிப்பிட்டு அதன் மீது அரசு சாலை விரிவாக்க நில எடுப்பு தொடர்பாக மாவட்ட உரிமையியல் சார்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கு எண்.11/2014 (LAOP-CIVIL TITLE DEGREE) காரணமாக சொத்து வரி விதிப்பு எண்.30217 நிறுத்தி வைக்கப்பட்டது’’ என தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

...2.

04.03.2024 நாளிட்ட மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தஞ்சாவூர் உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு எண்.11/2014 (LAOP-TITLE WINNER) நிலுவையில் உள்ளதாக அறிய முடிகிறது.

2) இம்மாதிரியான நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2015 ல் பிரிவு 10 (3) ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of inquiries Act, 1952 or any matter pending before a Court.

(c) xxx

எனவே, மேற்கண்ட சட்ட பிரிவின் கீழ் தங்களின் மனு மீது விசாரணை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என்று இம்முறை மன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு.P.முருகேசன்,
S/o.R.பெரியசாமி (லேட்),
2/705, வடக்கு வெள்ளாளர் தெரு,
மணக்கரம்பை,
தஞ்சாவூர்–613 205.
2) ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

நகல் :
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
சென்னை–600 032.
இ.கோப்பு / உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.